# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜனவரி 31, 2026

Weekly E-paper • January 31, 2026



# அறிஞர் அண்ணா ‘ஓர் ஆசிரியர்!’

சுப. வீரபாண்டியன்

## Unified India vs Unform India ஒருமையா? ஒற்றுமையா?

நெல்லை பாபு

## அடேங்கப்பா!

தலையங்கம்

## ஆரிய–திராவிடப் போரின் களம் 2026! நினைவூட்டுகிறார் முதல்வர் ஸ்டாலின்!

எழில்.இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜனவரி 31, 2026

Weekly E-paper ● January 31, 2026


# அறிஞர் அண்ணா 'ஓர் ஆசிரியர்!'

சுப. வீரபாண்டியன்

*1969 பிப்.3, பேரறிஞர் அண்ணா என்னும் பேரொளி நம்மை விட்டு மறைந்த நாள் ! ஆனால் அவர் காட்டிய பாதையும், ஊட்டிய சிந்தனையும் இன்னும் இந்த மண்ணில் நிலை பெற்று நிற்கின்றன!*

அறிஞர் அண்ணா - ஓர் அரசியல் தலைவர், முன்னாள் முதலமைச்சர், மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர், எண்ணற்ற கட்டுரைகளையும், நூல்களையும் தந்த எழுத்தாளர், மிகச் சிறந்த பண்பாளர் என்பனவற்றை எல்லாம் நாம் அறிவோம் ! எல்லாவற்றையும் தாண்டி, அவர் ஓர் ஆசிரியர்!

ஆம், அவர் முறைசாராக் கல்வியின் ஆசிரியர், பொதுக்கூட்டங்கள் அவருடைய வகுப்பறைகள், எழுதிக் குவித்த வெள்ளைத் தாள்கள் நமக்கான கரும்பலகைகள்!

1930களில் அவர் நேரடி அரசியலுக்கு வந்தார். அப்போது முதல், அவர் தொடர்ந்து எழுதிக் கொண்டும், பேசிக் கொண்டும் இருந்தார்! அன்றைய இளைய தலைமுறை, அவரிடமிருந்து கற்றவைகளும், பெற்றவைகளும் மிகுதி!

தன் கட்டுரைகளுக்கு அண்ணா சூட்டிய, பிரென்னர் கால்வாயில், ஸ்லட் நதிக்கரையில் போன்ற தலைப்புகள் எல்லாம் புதிய பாடங்களை அன்றைக்குச் சொல்லிக் கொடுத்தன. ஆம், ஹிட்லரும், முசோலினியும் சந்தித்துப் பேசிய இடம் பிரென்னர் கால்வாய்! இந்து மதத்தை விட்டு வெளியேறி, சமத்துவக் கருத்துகளைச் சீக்கிய மதம் எடுத்துச் சொன்ன இடம் ஸ்லட் அல்லது சட்லெஜ் நதிக்கரை!

சோவியத் நாட்டில், ஸ்டாலினும், ட்ராட்ஸ்கியும் எங்கே வேறுபட்டார்கள்? அண்ணாவைப் படித்தவர்களுக்குப் புரியும்!

எமிலி ஜோலாவின் நானா பாத்திரத்தை அண்ணாவின் வகுப்பில் இருந்தவர்கள் அறிவார்கள்! என் தாய் மொழியில்தான் நான் என் ஆய்வேட்டை எழுதுவேன் என்று சொன்ன லெமனசோவை எடுத்துக்காட்டி, தாய்மொழிக் கல்வியின் தேவையை அன்றே உணர்த்தியவர் அண்ணா!



கம்பனின் கவிதை நயத்தை, கற்பனைத் திறத்தை, ஒப்புமை வளத்தை ஒப்புக்கொண்டாலும், கம்பரசம் பல இடங்களில் காமரசமாக இருக்கிறது என்பதை விளக்கியவரும், சேர்கிழார் ஒரு சீர்திருத்த காரரா என்று கேட்டு, செவ்விய விடையைத் தந்தவரும் நம் அறிஞர் அண்ணா!

உள்ளூர் அரசியலைத் தாண்டி, உலக வரலாற்றை, எண்ணற்ற இலக்கியங்களை, தத்துவச் சிந்தனைகளைத் தன் அழகிய தமிழில் எடுத்துச் சொன்ன இணையற்ற பேராசான், எம் பேரறிஞர் அண்ணா!

இந்தக் கோணத்தில் மட்டுமே, எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும், பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிப் பேசலாம்! வரும் 3 ஆம் தேதி, அவருடைய நினைவு நாளில், சென்னை மாநகரத்தில், ஒரு சிற்றரங்கில், பேரவையின் இளைஞர் அணி நடத்தும் கருத்தரங்கில் ஒரு மணி நேரம் உரையாற்றலாம் என்று இருக்கிறேன்! வாருங்களேன்....! ●

# Unified India vs Unform India
# ஒருமையா? ஒற்றுமையா?

நெல்லை பாபு

இந்தியாவின் 75 ஆண்டுகாலக் குடியரசு வரலாற்றில், தமிழ்நாடு எப்போதும் ஒரு தனித்துவமான திசைகாட்டியாக இருந்து வருகிறது. திராவிட இயக்கம் 'இந்தியா' என்பதை ஒரு 'ஒன்றியமாக' (Union of States) மட்டுமே பார்க்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் பிரிவே "India, that is Bharat, shall be a Union of States" என்றுதான் தொடங்குகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள " வெல்வோம் ஒன்றாக" என்ற செய்தி, வெறும் அரசியல் முழக்கமல்ல; அது நீதிக்கட்சி தொடங்கி இன்று வரை வளர்ந்து நிற்கும் திராவிட இயக்கத்தின் தத்துவச் சுருக்கம். அது வெறும் வாழ்த்து மடல் மட்டுமல்ல; அரசியல் சாசனம் வழங்கியுள்ள உரிமைகளுக்கான அறைகூவல்.

"Let's celebrate a unified India. Not a uniform India." என்று அவர் சொல்லியிருப்பது இன்றைய இந்திய அரசியல் சூழலில் மிக முக்கியமான தத்துவார்த்த நிலைப்பாட்டைப் பதிவு செய்கிறது.

திராவிட இயக்கம் எப்போதும் "ஒற்றைத்தன்மைக்கு" (Uniformity) எதிரானது. அதே நேரத்தில் "ஒற்றுமைக்கு" (Unity) ஆதரவானது.

அதிகாரம் என்பது ஒரே இடத்தில் குவியக்கூடாது. டெல்லியில் குவியும் அதிகாரம் ஜனநாயகத்தை நசுக்கும். முதலமைச்சரின் செய்தியில் உள்ள "Unified India" என்பது கூட்டாச்சி ( Federal Government) முறையின் தேவையை வலியுறுத்துகிறது. இது முத்தமிழறிஞர் கலைஞரின் "மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்ற முழக்கத்தின் புதிய பரிமாணம்.

இந்தியா என்பது பல்வேறு தேசிய இனங்கள், மொழிகள் மற்றும் கலாச்சாரங்களின் தொகுப்பு. இதைச் சிதைத்துவிட்டு 'ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம்' என மாற்றுவது இந்திய அமைப்பிற்கே எதிரானது என்பது தான் நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டிய செய்தி.

"யாரையும் பின்னுக்குத் தள்ளிவிடாமல் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி" (Leave no one behind) என்பதே திராவிட மாடலின் இலக்கு. இது தந்தை பெரியார் முன்வைத்த சமூக நீதியின் நவீன வடிவம்.திராவிட மாடல் என்பது வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; அது சமூகப் படிநிலைகளை உடைக்கும் வளர்ச்சி,

விளிம்புநிலை மக்களும் அதிகாரத்தில் பங்கு பெறுவதே உண்மையான ஜனநாயகம் என்பதை முதல்வரின் செய்தி முன்னிறுத்துகிறது. சமூகத்தின் விளிம்புநிலையில் இருக்கும் ஒரு மனிதனும், அதிகாரத்தின் உச்சத்தில் இருப்பவருக்கு இணையான மரியாதையையும் வாய்ப்பையும் பெறுவதே "Dignity" (கண்ணியம்) என்று முதலமைச்சர் குறிப்பிடுகிறார்.

" Languages coexist with pride" என்ற முதலமைச்சரின் வரிகள், தமிழ்நாட்டின் தியாகங்கள் நிறைந்த மொழிப்போர் வரலாற்றைப் பிரதிபலிக்கின்றன. இந்தியாவில் இந்தி திணிப்புக்கு எதிரான நீண்ட கால போராட்ட வரலாற்றைக் கொண்ட தமிழ்நாட்டின் உரிமைக்குரல் இது. ஒரு மொழி மற்றொன்றின் மீது ஆதிக்கம் செலுத்தாமல், அனைத்து மொழிகளும் சமமான அந்தஸ்தைப் பெற வேண்டும். தாய்மொழி என்பது வெறும் தொடர்பு சாதனம் மட்டுமல்ல, அது ஒரு இனத்தின் அடையாளம் மற்றும் அறிவுசார் சொத்து.இந்தித் திணிப்பைத் தமிழ்நாடு தொடர்ந்து எதிர்ப்பது வெறுப்பினால் அல்ல; மாறாக, தமிழ் உள்ளிட்ட அனைத்துத் தேசிய மொழிகளுமே சமமான மரியாதையைப் பெற வேண்டும் என்ற தார்மீகக் கோபத்தினால்.

"Faith is a personal truth" (நம்பிக்கை என்பது தனிப்பட்ட உண்மை) என்று முதலமைச்சர் குறிப்பிட்டிருப்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மதச்சார்பின்மைக் கொள்கையை வலியுறுத்துகிறது. மதம் என்பது மனிதனுக்கும் அவர் சார்ந்த நம்பிக்கைக்கும் இடையிலான தனிப்பட்ட விஷயம். ஆனால், அரசு என்பது அனைத்து மதத்தினருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். இதை பொதுவெளியில் திணிப்பது ஜனநாயகத்திற்குப் புறம்பானது என்பது திராவிடக் கொள்கை. மொழி, கலாச்சார,

பண்பாட்டுத் தளங்களின் பன்முகத்தன்மை (Diversity) பாதுகாக்கப்படும்போதுதான் இந்தியா "plural and proud" (பன்மைத்துவம் மிக்க பெருமிதம்) கொண்ட நாடாக இருக்கும்.

## பெரியாரின் சமூக சீர்திருத்தம்

அண்ணாவின் அரசியல் சீர்திருத்தம் மற்றும் தலைவர் கலைஞரின் நிர்வாகச் சீர்திருத்தம் இவை மூன்றும் இணையும் புள்ளியில் தான் நவீன தமிழ்நாடு இயங்குகிறது என்பதே முதல்வரின் வாழ்த்து மடல் சொல்லும் செய்தி.

தமிழ்நாடு இன்று காட்டும் இந்த ஜனநாயக வழிமுறை, ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் ஒரு பாடமாகும். பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, மற்றும் மொழிப்பற்று ஆகியவற்றை இணைத்து ஒரு மாநிலம் எப்படி வளர முடியும் என்பதற்கு திராவிட மாடல் ஆட்சியே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

வெல்வோம், ஒன்றாக! என்பது வெறும் தமிழ்நாட்டிற்கான முழக்கமல்ல; இது ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்திற்கான ஜனநாயகம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தின் குரல்.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## அடேங்கப்பா!

கட்டுச்சோறுமூட்டைஎன்றுதென்பகுதிகிராமங்களில் ஒரு சொல் உண்டு. அதில் கூட்டு, பொரியல், ஊறுகாய், சோறு போன்றவை ஒரு பொட்டலமாக இருக்கும்.

தேர்தல் நெருங்கி வருகிறது. என்டிஏ கூட்டணியில் சேர அழைத்தாலும்யாரும்வரவில்லை.என்னசெய்வது? அதிமுக, பாமகவின் ஒரு பிரிவு, ஐ.ஜே.கே, தமிழ் மாநிலக் காங்கிரஸ் போன்ற நிழல் கட்சிகளை எல்லாம் மிரட்டி சோற்று மூட்டைக் கூட்டணியாக வைத்திருக்கிறது பா.ஜ.க.

பாஜக தமிழகத்தில் போணியாகாது. அதிமுக, பாஜகவிடம் தேய்ந்து கொண்டு இருக்கிறது. திமுகவுக்கு எதிரான சக்தி இல்லையே!

அப்போது மாட்டியதுதான் நடிகர் விஜயின் தவெக.

கட்சியை ஆரம்பித்தார்.ஈரோடுபோனார். 41உயிர்கள் பலியாயின. பறந்துபோனார் பனையூருக்கு. கட்சியில் எல்லோரும் தலைமறைவு. 'ஜனநாயகன்' வந்தான். தணிக்கைச் சிக்கலில் மாட்டிக்கொண்டான்.

அந்த தவெக கட்சியில் –

ஆதவ்அர்ஜுனா,புஸ்ஸிஆன்நந்த்,செங்கோட்டையன், நாஞ்சில் சம்பத் உள்பட யாரும் அரசியல் பேசவில்லை, தேர்தல்களம்நோக்கிச்செல்லவில்லைஅமைதி,அமைதி, அமைதி!

ஆனால் திமுகவுக்கு எதிராக தவெக வந்துவிட்டது, கணிசமான ஓட்டைப் பிரிக்கப் போகிறது, விஜயுடன் காங்கிரஸ் போகப்போகிறது, தவெக பிள்ளையார்



சுழிபோட்டுவிட்டது. திமுகவுக்குப் போட்டியாக வந்துவிட்டார் விஜய், விஜய்,விஜய் என்று முடிந்தவரையும் கூப்பாடு போட்டுப் பார்த்துவிட்டன பார்பனப், பார்ப்பனச் சார்பு ஊடகங்கள். அதாவது திமுகவுக்கு எதிராக வேலைசெய்கிறதாம் அவை.

மக்களுக்குத் தெரியாத அரசியலா என்ன?

அமித்ஷாவின் சர்க்கசையும், சில ஊடகங்களின் அரிதார வேலைகளையும் தேர்தல் முடிவுகளின் மூலம் புஸ்வாணமாக்க இருக்கிறார்கள், மக்கள்.

கிழக்கில் உதிக்கும்! உச்சிக்கு வரும்! மக்களோடு மக்களாக இருக்கும் எங்கள் உதயசூரியன்! ●

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408



பேரவையின் தலைவர் தோழர் சுப.வீ அவர்களின் அக்கா திருமதி. கனகம் அவர்களின் மகன் திரு.சுப்பையா அவர்கள் 25.01.2026 அன்று மறைவெய்தினார். 26.01.2026 அன்று எவ்வித மூடச் சடங்குகளும் இன்றி சுயமரியாதையோடு நடைபெற்ற அவரது இறுதி நிகழ்வில் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன், துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம. வைரமுத்து, தோழர்கள் சிதம்பரம், செல்வம் முடியரசன், குமரன்தாஸ், கலைமணி, நவில், அமர்நாத் மற்றும் ஸ்டூடியோ சரவணன் ஆகியோர் இறுதி மரியாதை செலுத்தினர்.

# ஆரிய-திராவிடப்போரின் களம் 2026!

# நினைவூட்டுகிறார் முதல்வர் ஸ்டாலின்!

**எழில்.இளங்கோவன்**

**"2026 தேர்தல் களம் ஆரிய, திராவிடப் போரின் மற்றொரு களம்தான்"** தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள், 25-01-2026 காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் பொதுக்கூட்டத்தில் இப்படிப் பேசியிருக்கிறார். இது ஏதோ போகிற போக்கில் சொன்னதல்ல, பொருள் பொதிந்த, சிந்திக்க வைக்கும் பேச்சு.

மாடுமேய்த்துக்கொண்டு நாடோடிகளாகக் கைபர் - போலன் கணவாய்களின் வழியாக சிந்துசமவெளிக்குள் ஆரியர்கள் எப்போது நுழைந்தார்களோ (கி.மு.1500) அப்போதிருந்தே தொடங்கியது ஆரிய - திராவிடப் போராட்டம். சரியாகச் சொன்னால் இப்போராட்டம் இன்றைக்கு 3526 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.



ஆரியர்கள் அறிவாளிகள் இல்லை, ஒழுக்கமானவர்கள் இல்லை, குடிகாரர்கள், சூதாடுபவர்கள், நேர்மையற்ற வஞ்சக குணம் கொண்டவர்கள் என்று டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார். அதற்குச் சான்றாக அவர்களின் இராமாயண, மகாபாரத இதிகாசங்களைத் தூக்கிப் போடுவார். ஆரியர்களால் உருவாக்கப்பட்ட மதத்தால், அதன் கற்பனைப் பொய்களால் மதிமயங்கிய வடநாட்டு மக்கள், மதம் என்ற அடிப்படையில் இவர்களிடம் வீழ்ந்தார்கள். ஆனால் தமிழர்களிடம் இவர்களின் வித்தை என்றும் பலித்ததில்லை.

வடக்கிலிருந்த இரு ஆரியமன்னர்கள் கனகன் - விசயன் தமிழரை இழித்துப்பேசினார்கள் என்பதற்காகப் படை நடத்தி கங்கைக்கரைக் குயிலாலுவத்தில் அவர்களின் செறுக்கழித்துத் தலையில் கல்லேற்றிச் சுமக்க வைத்து தமிழ்நாடு வந்தவன் தமிழன் சேரன் செங்குட்டுவன். இரண்டாம் கரிகாலனும், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் அதேகங்கைக்கரையில் ஆரியப்படைகளைச் சிதறடித்தனர் என்பது பண்டைய வரலாறு.

1938 களில் இந்தியை ஆட்சிமொழியாக்க எடுத்த நடவடிக்கைகளை ஐயா தந்தைபெரியார், மறைமலையடிகளார், திரு வி.கல்யாணசுந்தரனார், சோமசுந்தர பாரதியார் உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் இணைந்து தோற்கடித்துத் தடுத்து நிறுத்தினார்கள். உண்மையில் சமஸ்கிருதம் பார்ப்பனர்களின் தாய்மொழியே இல்லை. கைபர்-போலன் கணவாய் வழியாக வந்தபோது அவர்கள் பேசிய மொழி 'ஆர்ய' என்ற ஈரானிய பிராந்திய மொழி வடிவின் ஒன்று. பின்னர் பாணினி என்பவர் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் எழுதிய 'அஷ்டாத்யாயி' என்ற சமஸ்கிருதத்தை தங்களின் தாய்மொழி என்று ஆக்கிக்கொண்டார்கள். அதன் முன்வடிவம் இந்தி. அதனால் இந்தியைத் திணிக்க ஆரியப் பார்ப்பனர்கள் முயல்கிறார்கள்.

அப்படியே 1965ஆம் ஆண்டு இந்தியை ஆட்சிமொழியாக்க முயன்றதன் விளைவாக, ஒன்றியப் பார்ப்பன அரசுக்கு மிகப்பெரிய அடியைக் கொடுத்து, திமிர்ந்து எழுந்து நின்றவர்கள் தமிழர்கள். மதங்களை உருவாக்கி சனாதனத்தை நிலைப்படுத்த, அதன் மூலம் மக்களைப் பிளவுபடுத்தி, மொழி ஆதிக்கத்தைக் கையில் எடுத்து 'ஒரே பாரதம்' என்று ராம ராஜ்ஜியத்தை நிலைநிறுத்தப் பார்க்கிறது, ஆரிய பார்ப்பனியம்.

சாதிபேதமற்ற, சமத்துவத்தில், அறிவியல் விஞ்ஞானத்தை மக்களுக்கு அளித்துப் பகுத்தறிவு உலகத்திற்காக உழைக்கிறது, திராவிடம்! அதிகாரத்தைக் கைப்பற்ற முனைகிறது ஆரியம். அதன்மூலம் மக்களை அடிமையாக்கத் துடிக்கிறது, ஆரியம்.

திராவிடம் ஆரிய அடிமை விலங்கை உடைக்கும் கூராயுதம். ஒவ்வொரு காலத்திலும் ஆரிய - திராவிடப் போர் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

அதனால்தான் 2026ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பொதுத்தேர்தலும், ஆரிய - திராவிடப் போரின் களம் என்று முதலமைச்சர் சுட்டிக்காட்டுகிறார்.

எனவே முதல்வர் ஸ்டாலின் அவர்களின் எச்சரிக்கையை ஏற்று, அந்நிய ஆரிய என்டிஏ கூட்டணியைத் தோற்கடிப்போம்.

உதயசூரியன் தலைமையேற்கும் இந்தியா கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம், தமிழ்நாட்டில்! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian